Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.9 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.நடராஜன் | Taluk | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of September 2024.
(Accused present)

**முதல்நிலை விசாரணை:**

நான் பரமத்தி வேலூர், கே.புதுப்பாளையம் வள்ளியப்பம்பட்டி புதூரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். 2015ம் ஆண்டு கொங்கு வேபிரிட்ஜ்ல் வேலை செய்து வந்தேன். 25.1.2015ந் தேதி இரவு 8.15 மணிக்கு கொங்கு வேபிரிட்ஜ் எதிர்புறம் சக்கரபாணி டீ கடையில் சம்பவம் நடந்தது. சம்பவம் நடக்கும் போது நான் வேபிரிட்ஜ்ல் இருந்தேன். 8.15 மணிக்கு டமால் என்ற சத்தம் கேட்டது. நான் சம்பவ இடத்திற்கு போய் பார்த்தேன். கடை தரைமட்டமாக கிடந்தது. 3 பேர் இறந்து கிடந்தார்கள். அவர்கள் பெயர் கருப்பண்ணன், பெரியாகவுண்டர் மற்றும் குப்புசாமி ஆகும். நான் அதை பார்த்ததும் மயக்கமாகி விட்டேன். கடையில் சிதறி கிடந்த பொருட்களை பார்க்கவில்லை. எப்படி கடை வெடித்து சிதறியது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக நான் மருத்துவமனையிலிருந்த போது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

இந்நிலையில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞரால் அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் சம்பவ இடத்திற்கு போய் பார்த்த போது கேஸ் வாடை அடித்தது என்றும் கேஸ் மாற்றும் ராடு, சிலிண்டர் அடுப்பு எல்லாம் சிதறி கிடந்தது என்றும், கடைக்காரர் சக்கரபாணி சிலிண்டரிலிருந்து கேஸ் மாற்றிய நிலையில் சிலிண்டரை வைத்து விட்டு வீட்டிற்கு போய் விட்டார் என்றும், கேஸ் கசிவு ஏற்பட்டு கரண்ட் ஆப் ஆகி திரும்பி வந்தவுடன் கேஸ் லீக் ஆகி இருந்ததால் தீ பிடித்து கடை வெடித்து சம்பவம் நடந்ததாக போலீசாரிடம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு பழக்கமானவர் என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பற்றுவதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.10 witness for Prosecution**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.பழனியாண்டி | Taluk | : | |
| Father's/ Husband's Name | : | | Calling | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of September 2024.

(Accused present)

**முதல்நிலை விசாரணை**:

நான் வள்ளியப்பம்பட்டியில் குடியிருந்து லாரி டிரைவராக வேலை செய்து வருகிறேன். இறந்து போன கருப்பண்ணன் எனது அக்கா கணவர் ஆவார். 25.1.2015ந் தேதி இரவு 8.30 மணிக்கு எனது அக்கா கணவர் கருப்பண்ணன், பெரியாகவுண்டர் மற்றும் குப்புசாமி ஆகியோர் சக்கரபாணி என்பவர் டீ கடைக்கு வெளியே உட்கார்ந்திருந்த போது கடை தீடீரென வெடித்து அங்கிருந்த மூன்று பேரும் இறந்து விட்டதாக கேள்விபட்டேன். சம்பவ இடத்திற்கு சென்ற போது ஆம்புலன்ஸ் வந்து இறந்தவர்களின் உடல்களை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் 26.1.2015ந் தேதி காலை நாமக்கல் அரசு மருத்துவமனை சென்று எனது அக்கா கணவர் கருப்பண்ணன் பிரேதத்தை பார்த்த போது ஆய்வாளர் அக்கா கணவர் கருப்பண்ணன் பிரேதத்தின் மீது 8.00 மணிக்கு பிரேத விசாரணை செய்த போது நானும் உடன் இருந்து சாட்சியம் அளித்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.